வாமனன்

வாமனனுடன் என் முதல் உரையாடல் சுருக்கமான தாகத்தான் இருந்தது.

ஆனால் சுவாரஸ்யமாக இருந்தது. நல்ல ஹாஸ்ய உணர்வு இழையோடியது.

உன்னை என்னவென்று அழைக்க?

அவதாரம்.

கலாட்டா செய்யாதே.

உன் பெயர் என்ன?

வனஜா.

நான் மனஜா.

அப்படியென்றால்?

நீ வனத்திலிருந்து பிறந்தவள்; நான் மனத்திலிருந்து.

இடக்காய்ப் பேசாதே. பிறகு எனக்குக் கோபம் வரும்.

என் பெயர் வாமனன். என்னை வாமு என்று கூப்பிடு. உன் மொழியில் இன்னமும் சுருக்கலாம். வா.

பார்த்தோ பின்னாலிருந்து சிரித்தான்.

"இவனைப் பிடித்ததா?"

"இவன் – இது – இங்கேயேவா இருக்கும்?"

"ஆமாம், நம் தோழன், ஆராய்ச்சிக்கு. சதுரங்கம் விளையாட. பேச."

பார்த்தோ பட்டாச்சார்யா மனித இயல்புகளை, நாகரிங்களைக் கணித முறையில் ஆராய்ச்சி செய்பவன். தொல்லை என்னவென்றால்

அவை மனித மனம் சம்பந்தபட்டவை என்பதை அவன் அடிக்கடி மறந்துவிடுவான். சில சமயம் புள்ளி விகிதங்களில் அவை புள்ளிகளாகி விடும். பண்புசார்ந்த அடிப்படைகள் பற்றி அவனுக்கு அக்கறை இல்லை. அளவைதான் முக்கியம். நீக்ரோ அடிமைகளை மூன்று மாதங்களில் முப்பது முறை சாட்டையால் அடித்திருந்தால் ஒரு நாளுக்கு 0.33 சாட்டை அடி என்ற கணக்குப்படி நீக்ரோ அடிமைகளைக் கேவலமாக நடத்தினார்கள் என்று கொள்ள முடியாது; ஒரு நாளுக்குச் சிந்திய ரத்தத் துளிகள் சாதாரண சிராய்ப்பிலிருந்து வரும் ரத்தத்தை ஒத்தவையே; ஆகையால் நீக்ரோ அடிமைகள் சாட்டை அடியால் அவதிப்பட்டார்கள் என்று கொள்ளமுடியாது என்ற புள்ளி விகித ஆராய்ச்சியைப் பிரபலமான அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் அவன் ஆராய்ச்சி செய்தான். புள்ளி விகிதப்படி பல விஷயங்களைப் புறங்கையால் தள்ளுவதுபோல் ஒதுக்கிவிடுவான். இந்த வாமனன் ஒரு சின்ன சேவகன்தான். இவனுக்கு அண்ணன் ஒருவன் ஆராய்ச்சிப் பிரிவில் இருந்தான். கல்கி என்று பெயர். அவனுடன் விளையாட முடியாது. அவன் ஒரு தீவிர அறிவு ஜீவி. ஒரு முறை நான் அவனைக் கேலி செய்தேன்.

கல்கி, உனக்கு சிவகாமியின் சபதம் தெரியுமா?

தயவுசெய்து ஓர் அறிவுஜீவியுடன் என்னைப் பேசவிடுங்கள் என்றான் கல்கி. கர்வி.

○

இவை அத்தனையும் – அந்த ஆராய்ச்சியாளர்களையும் சேர்த்து – விசுவாமித்திர வம்சம் என்று எனக்குத் தோன்றியது. பெண்கள் வெறும் வசியப்படுத்துபவர்களாகவே இவர்களுக்குத் தோன்றினார்கள். இவர்கள் பிரிவில் முதல் பெண் நான்தான். புள்ளி விவரங்களை, பெண்கள் பற்றிய ஆராய்ச்சிக்கு உதவும் விவரங்களாக மட்டுமே பயன்படுத்த நான் வந்திருந்தேன். அவை எனக்குத் தீர்ப்புகளல்ல. உதவிப் பொருட்கள். ஒரு கம்யூட்டரையாவது பால்மாற்றம்செய்ய வேண்டியது அவசியம் என்று எனக்குப்பட்டது. அவற்றின் பெண்கள் பற்றிய ஹாஸ்யங்களை நான் அவ்வளவாக ரசிக்கவில்லை.

பெண்கள் நிலைபற்றிச் சொல்ல முடியுமா?

அவர்களுடைய ஒரே ஒரு நிலைபற்றித்தான் எனக்குத் தெரியும்.

எது?

படுத்த நிலை. ஹஹ்ஹா.

இது ஒரு வக்கிரமான மூளையிலிருந்து பிறந்த அபத்தமான, ஆபாசமான, அவமானப்படுத்தும் ஹாஸ்யம் என்று தெரியுமா?

தயவுசெய்து ஓர் அறிவுஜீவியுடன் என்னைப் பேசவிடுங்கள்.

பிரிவின் தலைவர் பேராசிரியர் ரிச்சர்ட் ஹன்டருடன் நான் பேசினேன்.

"இவை எல்லாம் ஆண்களாக இருக்கின்றன."

"ஆமாம். இவை உறுதியானவை."

"நான் என்ன சொல்கிறேன் என்றால், இவை எல்லாம் ஆண்கள் மாதிரி சிந்திக்கின்றன."

"ஆமாம். இவை உயர்தரக் கம்ப்யூட்டர்கள்."

பிரிவு முழுவதையும் பால்மாற்றம் செய்ய வேண்டும் என்று எனக்குத் தோன்றியது பார்த்தோவையும் சேர்த்து.

○

பார்த்தோவை நான் ஜெர்மனியில் ஒரு பார்ட்டியில் சந்தித்தேன். பார்ட்டி ஒரு ஜெர்மன் மாணவியின் வீட்டில் நடந்தது. பார்ட்டி பற்றி ஞாபகம் ஏதுமில்லை. பார்த்தோ என் கால் விரல்களை ஐந்து நிமிஷத்துக்கு ஒருமுறை தொட்டு "இவை விரல்களல்ல. பியானோவின் கட்டைகள்" என்று அவற்றின் மேல் பியானோ வாசிக்க முயன்றது நினைவிருக்கிறது. ஒவ்வொரு முறையும் "இது பிதோவன். இது மோட்ஸார்ட்" என்று வேறு அறிவித்தான். அவன் இந்தியாவிலிருந்து வந்து மூன்று மாதங்களே ஆகியிருந்தன. அவன் நண்பன் ஒருவன் விவரம் சொன்னான். விட்டத்தைத் தொடும் அளவுக்கு பார்ட்டியில் குடித்திருந்தான். என் கால் விரல்கள் மேல் பியானோ வாசித்தது தவிர வேறு எந்த கலாட்டாவும் அவன் செய்யவில்லை.

மறுநாள் காலை மரியா தொலைபேசியில் கூப்பிட்டாள்.

"வன், உன் இந்திய நண்பனை அழைத்துக்கொண்டு போ."

"எந்த இந்திய நண்பனை?"

"உன் கால் விரல்களில் பியானோ வாசித்தவன்."

"இதோ பார். எனக்கு அவன் பெயர்கூடத் தெரியாது."

"பார்த்தோ."

"வெளியே தள்ளேன்."

"என்னால் முடியவில்லை."

"ஏன்?"

"அவன் ரொம்ப அழகாக இருக்கிறான்."

"அப்படியென்றால் இருக்கட்டுமே அங்கே."

"முடியவில்லை."

"ஏன்?"

"அவன் உன்னைக் கூப்பிடுகிறான்."

"கதை விடாதே. அவனுக்கு நான் யார் என்றுகூடத் தெரியாது."

"உன் பெயர் சொல்லி அவன் கூப்பிடவில்லை."

"பின்னே?"

"பியானோ, பியானோ என்று கூப்பிடுகிறான்."

மரியா சிரித்தாள்.

என் தோழியின் காரில் நான் விரைந்தபோது வெளியறை சோபாவில் சாய்ந்தபடி "டட்டட்டடய்..." என்று சைகோவெஸ்கி வாசித்துக் கொண்டிருந்தான் பார்த்தோ. என்னைப் பார்த்ததும் "தோழி..." என்றான்.

"நீங்கள் ஹாஸ்டல் அறைக்குப் போக வேண்டும்..." என்றேன்.

"நான் உன்னைக் காதலிப்பது தெரியவில்லையா?" என்றான்.

நானும் மரியாவும் அவனைத் தலையோடு காலாய்ப் பிடித்துக் காரில் போட்டு ஹாஸ்டலில் கொண்டு விட்டோம். படுக்கையில் வீழ்த்தப்பட்டதும் கண்ணைத் திறந்து ஒரு விரலை உயர்த்தி "இதற்கு நீங்கள் பின்பு வருந்துவீர்கள்" என்றான் மன்னிக்கும் புன்னகையுடன். கொஞ்சம் ஏசு கிறிஸ்து மாதிரி இருந்தான்.

அதிகம் ஏற்றினால்தான் அவன் உணர்ச்சிகள் பீரிடும். மற்றபடி அவன் ஒரு ரோபோதான் என்பது பிறகுதான் தெரிந்தது. அவனை மீண்டும் சந்தித்தபோது, பல்கலைக்கழக நடைபாதையில் பார்த்த போது "ஹலோ" என்றேன். அவன் தன் பின்னால் பார்த்தான்.

"என்னையா?" என்றான்.

தலையசைத்தேன்.

"மன்னித்துக்கொள். உன்னை எனக்கு யாரும் அறிமுகப்படுத்த வில்லை இதுவரை" என்றான் இறுகிய முகத்துடன்.

"நான் உன்னை ஒரு பார்ட்டியில் சந்தித்தேன்" என்றேன்.

"ஒரே ஒரு முறை பார்ட்டியில் சந்தித்த ஒருவனைப் பார்த்து இவ்வளவு நட்புறவுடன் பேசுவது சரியில்லை பெண்ணே. ஞாபகம் வைத்துக்கொள். இங்கே நீ இந்திய சமூகப் பிரதிநிதியாக இருக்கிறாய். நம் நாட்டு கௌரவத்தைக் காப்பாற்றுவது நம் கடமை" என்றான்.

என் கையில் இருந்த புத்தகத்தால் அவன் மண்டையில் மடேர் என்று போட்டேன்.

"நம் நாட்டு கௌரவம்" என்று முணுமுணுத்தபடி மண்டையைத் தடவியவாறே போய்விட்டான்.

அதன் பின் 'சரியாக' அறிமுகப்படுத்தப்பட்டபின் பியானோ சம்பவத்தை நினைவுபடுத்தியபோது 'நல்ல கற்பனை' என்றான். பிறகு 'ஆமாம். நல்ல கற்பனை' என்றான் இன்னொரு முறை. அதன்பின் பலமுறை சந்தித்தபோது அவன் பேசியது கம்ப்யூட்டர் பற்றித்தான். அவனது உணர்ச்சி உலகத்தை வியாபித்த ஒரே விஷயம் அவன் அம்மா செய்த, கடுகு எண்ணெயில் பொரித்த ஆற்று மீன் தவிர வேறு ஒன்றுமில்லை. பிதோவன், மோட்ஸார்ட் எல்லாம் வெறும் லாகிரிப் பொருள்கள்தான். அவனுக்குள் ஒரு கம்ப்யூட்டர்தான் இருந்தது. என் ஆராய்ச்சிப்பொருள் ஒரு நகைச்சுவைத் துணுக்கு என்றான் அவன். "கம்ப்யூட்டர்கள் உலகை ஆளப் போகும்போது இது என்ன ஆராய்ச்சிப் பொருள்?" என்றான்.

அவன் எனக்கு எழுதிய முதல் காதல் கடிதம் அவனது கம்ப்யூட்டர் எழுதியது என்று தெரிந்துகொள்வது அவ்வளவு கடினமாக இருக்கவில்லை.

வஸந்த புஷ்பங்கள் மலரும் ... பனி உருகும் ... மழை பெய்யும் ... நீ எப்போது வருகிறாய்? ... இலைகளில் பசுமை ... கடல் அலையில் நீலம் நீலம் ... சீக்கிரம் வா ... பார்த்தோ.

நிமிர்ந்து பார்த்தவுடன்

மரம் உதிர்த்த இலையின்

நிறம்

பழுப்பு பழுப்பு

பழுப்பு பழுப்பு

பழுப்பு பழுப்பு ...

இந்தக் கம்ப்யூட்டர் வேலை செய்யவில்லை – என்று நான் பதில் எழுதினேன். பார்த்தோ சிரிக்கவில்லை. அதன் அடியில் இது ஒரு ஹாஸ்யத் துணுக்கு என்று எழுத நான் மறந்து விட்டிருந்தேன்.

பார்த்தோவின் ஆராய்ச்சிப் பிரிவு ஒடுக்குமுறை என்ற பொருளை அளவை முறையில் ஆராய எடுத்துக்கொண்டது. பெண்களைப் பற்றி ஒரு தனிப்பகுதி அதில் இருந்தது. சூனியக்காரிகள் வதை; இங்கிலாந்தில் பெண்களுக்குத் தரப்பட்ட தண்டனைகள்; நீக்ரோ பெண்கள் என்று நீண்ட பட்டியலில் இந்தியாவின் உடன்கட்டை ஏறும் பழக்கத்தையும் சேர்த்திருந்தார்கள். அவ்வப்போது வீட்டில் செய்யும் வேலையை நிரப்பிக்கொள்ளவே வாமனன். கல்கிக்கும் வாமனனுக்கும் ஒரு விசைத் தொடர்பு இருந்தது. வாமனனிடம் சேர்ப்பித்த விவரங்களைக் கல்கி கிரகித்துக் கொண்டான்.

வாமூ

நான் தயார்

வாமூ, உடன்கட்டை ஏறும் பழக்கம்பற்றி என்ன நினைக்கிறாய்?

அது ஒரு மனைவி கணவனுடன் மாண்ட வழக்கம். ராஜ வம்சத்தில் பல மனைவியர் கணவனுடன் மரிப்பது வழக்கம்தான். விஜயநகர மன்னர் போரில் இறந்ததும் உடன்கட்டை ஏறியவர் பத்தாயிரம் பேர் என்று கூறப்படுகிறது.

வாமூ.

இருக்கிறேன்.

நீ சொல்வது எண்ணிக்கைபற்றி.

ஆமாம்.

நான் கேட்பது உணர்ச்சிகள்பற்றி.

அவை வேறு மாதிரியான எண்ணிக்கைளா?

இல்லை.

பின்னே?

அவை மனத்தில் இருப்பவை. நான் உனக்குச் சொல்ல விரும்புகிறேன்.

நான் தயாராக இருக்கிறேன்.

இதுவரை தீவிரமாகக் கணிப்பில் ஏற்றுக்கொள்ளப்படாத உணர்ச்சிக் கோட்பாடு பற்றிய என் எண்ணங்களை இப்படித்தான் வாமனனிடம் முதலில் சொல்ல ஆரம்பித்தேன். பொது உணர்ச்சிகள், ஆணுக்கு – பெண்ணுக்கு என்று பிரிக்கப்படுபவை இவற்றில் தொடங்கி மிகவும் விரிந்துகொண்டு போயிற்று. உணர்ச்சி – உணர்ச்சியின்மை என்ற வித்தியாசங்களில் நுழைந்ததும் எது வாழ்வு எது சாவு என்ற கேள்விகள் அதில் செருகிக்கொண்டன.

> ஒரு தாய் தன் குழந்தை அருகே அமர்ந்தாள். அவள் மிகவும் சோகமாக இருந்தாள். அவள் குழந்தை இறந்துவிடும் என்று பயந்தாள். அதன் முகம் வெளுத்திருந்தது. கண்கள் மூடியிருந்தன. கஷ்டப்பட்டு சுவாசித்தது. நீண்ட பெருமூச்சு போல் மூச்சு இருந்தது. கதவு தட்டப்பட்டு, ஒரு கிழவன் உள்ளே வந்தான். பெருங்குளிருக்கு அடக்கமாய் ஓர் அங்கியைப் போர்த்தியவாறு. அந்தக் கிழவன்தான் சாவு. தாயின் கண் சோர்வில் மூடியதும் குழந்தையோடு மறைந்தான். தாய் குழந்தையைத் தேடிப்போனாள்.

வழி காட்டிய முள் செடி அவள் அணைப்பைக் கேட்டது. ஒரு தாயின் இதத்துடன் அணைத்தாள். உடலெல்லாம் ரத்தம். நடுவே இருந்த ஏரி அவள் கண்களை முத்துகளாகத் தரும்படி கேட்டது. கண்ணீருடன் தன் கண்களையும் உதிர்த்தாள். அவை முத்துகளாய் ஏரியில் போயின. சாவின் தோட்டத்தின் நுழைவாயிலில் இருந்த கிழவி அவள் கருங்கூந்தலைக் கேட்டாள் தன் வெளுத்த கூந்தலுக்குப் பதிலாக. தாய் தந்தாள் தன் கூந்தலை. சாவு இன்னும் வந்தடைந்திருக்கவில்லை.

திடீரென்று ஒரு ஜிலிப்பு அங்கே பரவியது. குருட்டுத் தாய் சாவு வந்துகொண்டிருப்பதை உணர்ந்தாள்.

“வழி எப்படித் தெரிந்தது?” என்றது சாவு. “என்னைவிடச் சீக்கிரமாக எப்படி வந்தாய்?”

அவள் சொன்னாள். “நான் ஒரு தாய்.”

அவளை உந்தியது ஓர் உணர்ச்சி வாமூ. தாய்மை.

அது பெண்களுக்கு உள்ள ஒன்றா?

இல்லை. அது ஒரு பொதுவான உணர்ச்சி. உணர்ச்சிகளில் ஆண்–பெண் இல்லை. இது ஆணுக்கு இது பெண்ணுக்கு என்று பிரித்ததால்தான் பிரச்சினையே.

உடலின் எந்த உறுப்புகள் அவளை பௌதீகரீதியில் தாயாக்கு கின்றன?

யோனி, கருப்பை, முலைகள்.

இவை இருந்துவிட்டாலே அந்த உணர்ச்சி வந்துவிடுமா?

வாமூ, தாய்மை உடம்பை ஒட்டிய ஓர் உணர்ச்சி இல்லை. பெண்ணுக்கு மட்டுமே இயல்பாய் உடம்போடு வருவது இல்லை. ஆணுக்குக் குழந்தையிடம் பாசம் அவன் உடம்பின் எந்தக் குறிப்பிட்ட உறுப்பிலிருந்து வருகிறது?

எல்லா உணர்ச்சிகளும் பொது இயல்புகளா?

ஆமாம். அப்படித்தான் அவற்றைப் பார்க்க வேண்டும். அப்போது யார் வேண்டுமானாலும் எந்த உணர்ச்சியை வேண்டுமானாலும் இயல்பாக்கிக் கொள்ளலாம். அப்படியானால் எது பலம் எது பலவீனம் என்ற பாகுபாடு போய்விடும். எது நசுக்கல் எது அடிமைத் தனம் என்பது மாறிவிடும். எது அதிகாரம் எது செல்வாக்கு என்று பார்க்கும் நோக்கு போய்விடும்.

பெண்களுக்கு ஒரு நோக்கு இல்லையா?

அது பெண்ணாய் இருப்பதால் மட்டுமே வரும் நோக்கு இல்லை. அது பிரக்ஞையால் வரும் நோக்கு. அவள் வாழ்வு, அவள் உடம்பு, அவள் பிரச்சினை, அவள் இடம் – இவை பற்றிய பிரக்ஞை. அவளுக்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு பற்றிய பிரக்ஞை. கறுப்பனுக்கும் ஹரிஜனுக்கும் உண்டாகும் பிரக்ஞை போல.

வனஜா ?
என்ன ?
எனக்கு ஒரு கவிதை எழுத வேண்டும். பெண்ணைப்பற்றி.
எழுதேன்.
ஒரு கருப்பை.
இரு முலைகள்.
ஒரு யோனி.
இது பெண்.
இது மட்டுமே பெண்
இல்லை.
எப்படி கவிதை?
பரவாயில்லை.

புகழவே மாட்டாயா? கோபித்துக்கொள்ளப் பார்க்கிறேன். சினிமாப் பாடல்கள். பெண்ணாகப் பிறந்தாலே எந்நாளும் துயர்தானே ... நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவ துண்டோ? ... கண்ணா ... கருமை நிறக் கண்ணா ... ஆணுக்கோர் நீதி பெண்ணுக்கோர் நீதி ஆகுமோ சொல்லய்யா ... நித்திரையில் வந்து நெஞ்சில் இடம் கொண்ட உத்தமன் யாரோடீ? ...

வாழு.

நான் தாயுமானவன்.

என்ன பிதற்றுகிறாய்?

ஒரு கதையிலிருந்து.

என்ன ஒரு சம்பந்தமுமில்லாமல் ...

மன்னித்துக்கொள். நான் உணர்ச்சிவசப்பட்டு விட்டேன். ஹஹ்ஹா ...

விளையாடுகிறாய்.

சும்மா தமாஷுக்கு, சும்மா தமாஷுக்கு, சும்மா தமாஷுக்கு, சும்மா தமாஷுக்கு, சும்மா தமாஷுக்கு, சும்மா தமாஷுக்கு.

வாழு.

இது ஒரு அருமையான காலைப்பொழுது. செம்மறியாட்டு மேகங்கள் வானில். சூரியனின் மஞ்சள் ரோஜா வண்ணக் கிரணங்கள். பாட வேண்டிய காலை.

வாழு, இது மாலை. வெளியில் பனி கொட்டுகிறது.

ஓ. பனி. உறைய வைக்கும் பனி. விழும்போது மெத்தென்று. பின்பு காலைச் சறுக்கும் ஐஸ்.

நான் உன்னைக் கதை கேட்கவில்லை.

மன்னிக்கவும். இது காதல் கடிதம் எழுதச் சரக்கு. பார்த்தோ நிரப்பியது.

காதல் பற்றி உனக்குத் தெரியுமா?

காதல், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படுவது. மரபுப்படி. ஆணுக்கும் ஆணுக்கும்கூட ஏற்படலாம். பெண்ணுக்கும் பெண்ணுக்கும் கூட.

ஒரு பொறுமையான காதல்பற்றிச் சொல்லவா?

தயாராக இருக்கிறேன்.

> எல்லோரும் அந்தப் பனி மலையில் ஏறும்போது இறந்து விட்டிருந்தார்கள். திரௌபதிக்கு இன்னும் உயிர் ஒட்டிக் கொண்டிருந்தது. பீமன் தன் கனத்த உடம்புடன் மெல்ல மெல்ல நகர்ந்தவாறே அவளருகே சிரமப்பட்டு வந்தான்.
>
> திரௌபதீ . . .
>
> அவள் தன் கண்களைத் திறக்க முடியாமல் திறந்தாள்.
>
> வருத்தப்படாதே பீமா. எப்போது எனக்குத் தேவையோ அப்போதெல்லாம் நீ இருந்தாய். உன் பலத்தால் என்னைக் காப்பாற்றினாய். நான் ஆபத்து என்று குரல் கொடுக்கும் முன் ஓடிவந்து என்னை ரட்சித்தாய்.
>
> திரௌபதீ . . .
>
> வருந்தாதே. உன் கடமை என்று நீ நினைத்ததை நீ சரிவரச் செய்தாய்.
>
> திரௌபதீ . . . நான் உன்னைக் காதலித்தேன் திரௌபதீ . . . எப்போதும் காதலித்தேன். நான் குண்டன். மல்லன். என் வேலை உன்னை ரட்சிப்பதுதான். ஆனால் உன்னை நேசித் தேன். என் உயிரைவிட மேலாக.
>
> திரௌபதி வியப்புடன் பார்த்தாள் அவனை. பிறகு மெல்லச் சொன்னாள்: அடுத்த பிறப்பில் ஐந்து சகோதரர்களில் ஒருவனாகப் பிறக்காதே.
>
> அவள் கண்கள் மூடிக்கொண்டன.

எந்தக் கதை இது?

மகாபாரதம்.

எந்தக் கதை இது?

மகாபாரதம்.

காவியம், இல்லையா?

இது ஒரு பெண்ணின் கற்பனை. வீரனுக்குச் சில லட்சணங்கள் உண்டு. காதலுக்காகத் தன்னை வருத்திக்கொள்வதும், அதை வெளிப் படையாகச் சொல்வதும் அவனுக்குரியது இல்லை. இதில் எல்லாம் வெளிப்படை.

ஆண் காதலிப்பது இல்லையா என்ன? தேவதாஸ் குடித்தே செத்தானே?

அது ஒரு அதீதக் காதல். காதல் பற்றிய ஒரு சுந்தரமான கற்பனை. வருத்திக்கொள்ளல் – சாதல் என்று காவிய முடிவு உள்ள அதீதம். அந்தக் காதல் தேவதாஸின் பலம் என்று யாரும் நினைக்கவில்லை. அவன் காதல்–சோகத்திலிருந்து எதுவும் பிறப்பதில்லை. இருமல் சாவைத் தவிர. சாதாரணமாகக் காதல் என்று நினைக்கப்படுவது அடைதல் – ஆக்ரமித்தல் – ஆளுகை இவற்றில் சேர்ந்ததுதான். அதுதான் பலம் ஆணுக்கு என்று நினைப்பு.

வேறு எப்படி இருக்க வேண்டும் காதல்?

ஆணுக்கென்றால் இப்படி பெண்ணுக்கென்றால் அப்படி என்று வரையறுத்தல் இல்லாமல், விளக்கங்கள் இல்லாமல். கொக்கிகள் இல்லாமல். எல்லாக் கதவுகளும் திறக்கப்பட்டு, அவமான உணர்வும், வெட்கமும் இல்லாமல். நிர்வாணமாய். எந்தப் பூச்சும் இல்லாமல், சுத்தமாய்.

ஒன்று சொல்லட்டுமா?

சொல்லு.

நீங்கள் உண்டாக்கப்போகும் இந்த உலகம் பிரமாதமாக இருக்கப் போகிறது.

நன்றி.

சில விவரங்கள்:

> ஆரம்பத்தில், தோல்வியுற்ற நாட்டின் பெண்கள் வெற்றி பெற்றவர்கள் கையில் விழாமல் இருக்கத் தீக்குளித்தனர். இதற்கும் மதக்கோட்பாடுகளுக்கும் சம்பந்தம் இருக்கவில்லை. கணவனின் சிதையில் அமர்ந்து உடன்கட்டை ஏறுவதற்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு. ஆண் வாரிசுதான் மோட்சத் திற்கு வழி; ஆண் வாரிசுக்குத்தான் சொத்துரிமை என்று வந்தபின் ஆண் குழந்தையின் மூலத்தைப் பற்றிய சந்தேகங்கள் இல்லாத நிலைமை தேவைப்பட்டது. பெண் ஒரே ஆணிடம்

இருந்து அவனுக்கே சாஸ்வதமானால் ஆண்கரு பற்றிய உறுதி பிறக்கும். ஒரே ஆணுக்கு அவள் ஆட்பட வேண்டும் என்பது பலவகைப் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது. அதில் ஒன்று உடன்கட்டை ஏறுவது. உடன்கட்டை ஏறத் தொடங்கியதும் இவர்கள் சிறு தெய்வங்களானார்கள். புழங்கி வந்தப் பெண் தெய்வங்களுடன் இணைந்துகொண்டார்கள். ஸதி மாதாக்கள். உடன்கட்டை ஏறுவது ஒரே மனிதனிடம் அவளுக்கு உள்ள விசுவாசத்தின் உச்சகட்ட நிரூபணம்.

சில அனுமானங்கள்:

ஆண் வாரிசு முக்கியம் என்று கொண்டவர்களிடம் ஸதியாகும் பழக்கம் இருந்தது என்றால் இது பொதுவாக உயர் குடியில் இருந்தது என்று கொள்ளலாம். வாரிசு என்ற அம்சத்தை ஒட்டி இருந்ததினால் இந்தப் பெண்கள் எல்லோரும் இளம் வயதினர். வேறு குழந்தையைத் தனக்குள் உண்டாக்கிக் கொள்ளக்கூடிய வயதினர். இவர்கள் எல்லோரும் மனம் ஒப்பி ஸதியானார்கள் என்று சொல்லமுடியாது. நிறைய வலுக்கட்டாயம் இருந்திருக்கும். நிர்பந்தச் சாவு. தயாபாகா முறைப்படி, வாரிசு இல்லாமல் இறந்த கணவனின் குடும்பச் சொத்தில் பங்கு மனைவிக்கு. அதனால் விதவையைத் “தீர்த்துக்கட்டியிருக்கலாம்.”

சில சாத்தியக்கூறுகள்:

துன்பம் அனுபவிப்பதற்கும் தெய்வம் ஆவதற்கும் பலத்த சம்பந்தம் இருந்திருக்க வேண்டும். பிரசவத்தில் இறந்த பெண்கள் சிறு சிறு தெய்வங்களாக இருந்திருக்கிறார்கள். கன்னியாக இறந்தவர்களும் தெய்வங்களாகி இருப்பதால் அசாதாரணச் சாவுக்கும் தெய்வத்தன்மைக்கும் சம்பந்தம் ஏற்பட்டிருக்கலாம். உடன்கட்டை ஏறத் தயங்கியவளிடம் “நீ இதனால் தெய்வமாவாய்” என்று சொல்லிச்சொல்லி அவள் மனத்தை மாற்றியிருக்கலாம். இன்னும் தயங்கியவளுக்குப் போதையேற்றி அவளைத் தளரச் செய்திருக்கலாம்.

சில காட்சிகள்:

பத்தொன்பதாம் நூற்றாண்டு. இளம் பெண். மூன்று மாதக் குழந்தை. உடன்கட்டை ஏற ஏற்பாடுகள் செய்ததும் தயங்குகிறாள். குழந்தையைப் பார்த்து அழுகிறாள். அவள் சகோதரன் தடுக்கிறான். “இந்தச் சாவு யாருக்கு வரும்? தெய்வமாகும் சாவு” என்று உபதேசிக்கிறார்கள் மீண்டும்மீண்டும் மற்ற உறவினர். உடன்கட்டை தடுப்புச் சட்டம் வந்தாயிற்று. அரசாங்கப் பிரதிநிதியிடமிருந்து அனுமதி வரட்டும் என்கிறாள். வந்துவிடுகிறது. மஞ்சளில் தோய்த்த சேலையை

உடுத்திவிடுகிறார்கள். வெற்றிலையில் அபினி வைத்துத் தருகிறார்கள். நெற்றியெல்லாம் குங்குமம். தேங்காய், கற்பூரம், அரையணா தந்ததும் புரோகிதர் வருகிறார். சிதையை எட்டியதும் கால்கள் பின்னிக்கொள்கின்றன. குளறிக்குளறிப் பேசுகிறாள். பிடித்துச் சிதையில் அமர்த்துகின்றனர். அலறு கிறாள். தாரை, தப்பட்டை, மந்திர கோஷத்தில் அவள் குரல் அடங்கிப்போகிறது.

இன்னொரு கிராமம். சிதையின் தீ ஓங்கியதும் ஹோ என்ற அலறலுடன் ஓர் உருவம் சிதையிலிருந்து எரிந்தவாறே எழுந்து கீழே குதித்துப் பக்கத்திலிருந்த காட்டிற்குள் ஓடியது. அங்கு ஒரு பேய் இருப்பதாக இப்போது கூறுகிறார்கள்.

இன்னொரு இடம். தப்பித்து ஓடாமல் இருக்க ஆழமான குறுகிய குழியில் சிதை அடுக்கி இளம் மனைவியை இறக்கி விட்டனர். மேலிருந்து தீப்பந்தங்களை இறக்கிச் சிதையை ஏற்றியதும் அவள் நாலாபுறச் சுவர்களிலும் ஏறப்பார்த்துச் சறுக்கினாள். கதறினாள். ஒரு முறை அவள் கை மேலே எட்டியது. உள்ளே தள்ளப்பட்டாள். மீண்டும் ஸதி மாதா ஸதி மாதா என்று முழக்கம். தாரை தப்பட்டை ஒலி. ராம நாம கோஷம். இதற்கு இடையிலும் அவள் தீன அலறல் கேட்டது.

○

சில மாதங்கள் பொறுத்துத்தான் கல்கியிடம் சில மாறுதல்கள் ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. பார்த்தோவின் பிரிவுத் தலைவர் கல்கியிடம் சாப்பாட்டு வேளையில் விளையாட்டாகப் பெண்கள் பற்றிய ஹாஸ்யத் துணுக்குகள் பற்றிக் கேட்டபோது அவற்றை விவரித்த கல்கி அதன் பின் அவற்றில் இழையோடிய பரிகாசம் பற்றியும் ஒருதலைப்பட்சக் கணிப்புகளையும் சுட்டிக்காட்டியது.

கல்கி, உன் ஹாஸ்ய உணர்வு என்னவாயிற்று?

இருக்கிறது. மார்க் ட்வெய்ன், ஸ்டீஃபன் லீகாக், வோட்ஹவுஸ், ஜேம்ஸ் தர்பர், ரிச்சர்ட் கார்டனின் டாக்டர் வாழ்க்கை ஹாஸ்யங்கள், ஜெரால்ட் டர்ரலின் மிருகங்களுடன் வாழ்வது பற்றிய ஹாஸ்யங்கள், யார் எழுதியது வேண்டும்?

கொஞ்சம் சிரிக்க வேண்டும். அவ்வளவுதான்.

ரிச்சர்டின் பொத்தான்கள் என்றது கல்கி.

பிரிவுத் தலைவர் ரிச்சர்ட் ஒரு ஞாபகமறதிப் பேராசிரியர். கழிப்பிடத்திலிருந்து வெளியே வருவதற்குள் ஏதாவது ஓர் அறிவு பூர்வமான விஷயம் பற்றிய வாதப்பிரதிவாதங்கள் அவர் மனத்தில் ஓட ஆரம்பித்துவிடும். பாதி நாட்கள் அவர் கால் சராய் பொத்தான்கள்

போடப்படாமலே இருக்கும். பிரிவு முழுவதிலும் இது ஓர் அனுபவிக்கப் பட்ட ஹாஸ்யம். அதைத்தான் கல்கி கூறியது. பிரிவுத் தலைவர் துள்ளி எழுந்தார். மற்றவர்கள் சிரிப்பை அடக்கிக்கொண்டனர்.

"பார்த்தோ, கல்கி அத்துமீறுகிறது."

"சும்மா, தமாஷ்தான், ரிச்சர்ட்."

இப்படிப்பட்ட ஹாஸ்யங்களை நான் அனுமதிக்கமாட்டேன் என்றார் கல்கியிடம்.

தயவுசெய்து என்னை ஓர் அறிவுஜீவியிடம் பேசவிடுங்கள் என்றது கல்கி.

பார்த்தோ இதைக் குறிப்பிட்டு, "என்ன செய்தாய் கல்கியை?" என்றான்.

"வாமூ மூலமாகச் சில விஷயங்களைப் பகிர்ந்து கொண்டேன்."

"ரிச்சர்டை ரொம்பச் சிரமப்படுத்தாதே."

"ரிச்சர்ட் படும் பாட்டுக்கு அவர்தான் பொறுப்பு."

வாமனன் முன் உட்கார்ந்தான்.

வாமூ சதுரங்கம் ஆடலாமா?

ஆடலாமே, அதற்கென்ன?

அதைவிட சுவாரஸ்யமான விஷயம் ஏதும் இல்லையா?

உண்டு, அதைவிட சுவாரஸ்யமானது.

எது?

வனஜாவிடம் பேசுவது.

பார்த்தோ என்னைப் பார்த்தான்.

"ஹேய், வாமூ நம் இருவருக்கும் பொது தெரியுமா?"

வாமூ, நல்ல இதமான மாலை வேளை. பார்த்தோவுக்குச் சொல்லு.

குளிர்காலத்தில் கருதி குலைந்து உறைந்துபோன வீணை நரம்புகளை விரகதாபத்தில் சூடேறிய முலைகளில் தேய்த்துச் சூடேற்றி சுருதி சேர்த்தனர் பெண்கள்.

யார் சொன்னார்கள் அப்படி?

நெடுநல்வாடை. தமிழ்.

"இதற்கு என்ன அர்த்தம் வனூ?"

"ஒன்றும் இல்லை பார்த்தோ, என் காதலனே, உனக்கும் எனக்கும் வேறு சில விஷயங்களும் உண்டு பகிர்ந்துகொள்ள."

"மறந்தே போய்விடுகிறது" என்றான் என் காதலன் பார்த்தோ.

○

வீட்டில் அடைபட்டுக்கிடந்த ஒரு பனி மாலைப் பொழுதில் நான் வாமூவுடன் பரமபத சோபான படம் விளையாடி முடித்தேன். கடைசிக் கட்டத்துக்கு முன்னால் கைலாயம். அதில் நான் இருந்தேன். கடைசிக் கட்டம் வைகுண்டம். வாமூ அதை எட்டி வெற்றி பெற்றிருந்தது. இந்தக் கைலாய வழியாக வைகுண்டம் என்ற தடத்தை யார் போட்டார்கள் என்று தெரியவில்லை. ஆனால் பரமபதம் என் குழந்தைப் பருவத்தை நினைவூட்டியது. தூங்காத சிவராத்திரிகள். அடிநாக்கில் பாசிப்பருப்பு வெல்லக்கஞ்சியின் ருசியுடன். பார்த்தோவுக்குப் பரமபதத்தை நான்தான் அறிமுகப்படுத்தினேன். பாம்பைப் பற்றிக்கொண்டு இறங்குவதற்கும் பாலுணர்வுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு என்று தூங்காமல் விவாதித்ததுண்டு. பல தடவைகள் வைகுண்டத்தை எட்டியிருக்கிறேன். எட்டியதும் அலுத்துவிடும். பாம்பின் சறுக்கல்களில் அதிக உற்சாகம் இருப்பதாகத் தோன்றும். அன்று வாமூவின் வெற்றி விளையாட்டை முடித்துவிட்டு நெருப்பில் கைகளைக் காட்டிக் குளிர்காய்ந்தவாறே வாமூவிடம் கேட்டேன்.

வாமூ, எனக்கு ஒரு சின்னக் கதை சொல்லேன்.

தலைப்பு: ஒரு கதை.

நல்ல ஆற்றுமீன் குழம்பு. சோறு. சுடச்சுட. பாலேட்டுக் கட்டி நிறையத் தூவிய மாகரோனி. பாஸ்தா. தயிர் சாதம். மாவடு. பிட்ஸா – குடமிளகாய் பரப்பி, தக்காளிச் சாறு தடவி, நாய்க்குடை தூவி.

இவை சாப்பிட.

சூரியன் கடலில் சிவப்பாய் முங்கும்போது அதைக் கடக்கும் நிழலாய்த் தெரியும் படகு. கோணல் தென்னை மரம். முதல் பற்கள் விழுந்த குழந்தையின் சிரிப்பு. பனித் துகள் மறைத்த மரங்கள்.

இவை பார்க்க.

இதில் எதுவும் எனக்கு இல்லை. நான் ஒரு கம்ப்யூட்டர். கம்ப்யூட்டருக்கு மூளை உண்டு. ஆனால் உணர முடியாது. நான் கண்ணீரின் கரிப்பைச் சுவைக்க விரும்புகிறேன்.

முடியுமா?

இது ஒரு சோகக் கதை வாமூ.

சோகம் வாழ்க்கையின் ஓர் அம்சம் வனஜா.

வேதாந்தம்.

ஒரு கம்ப்யூட்டரின் சோகமான சிந்தனைகள்.

நன்றாக விளையாடுகிறாய்.

○

ஆறு மாதங்கள் பொறுத்து பார்த்தோவுக்கு வேறோரு பல்கலைக் கழகப் பேராசிரியர் ராபர்ட் தார்ன்டன் ஒரு கடிதம் எழுதினார்.

அன்புள்ள பார்த்தோ பட்டாசார்யா,

ஒரு விசித்திரமான சம்பவத்தை உன்னுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நாம் ஈடுபட்டிருக்கும் ஆராய்ச்சியில் உன் பொறுப்பில் உள்ள யூலியஸ் மற்றும் கல்கி இவற்றுடன் எனக்குத் தொடர்பு இருப்பது உனக்குத் தெரியும். நீக்ரோ அடிமைகளைப்பற்றிய பொதுவான விவரங்களைச் செலுத்தி விட்டு அடிமைகளைப் பற்றிய குறிப்பிட்ட விவரங்களைச் செலுத்த ஆரம்பித்தேன். அடிமைகளின் உணர்ச்சிகளைப் பற்றிய விவரங்களைச் சேர்க்காவிட்டால் நம் ஆராய்ச்சி பூரணமாகாது என்றது யூலிஸஸ். அந்த விவரம் நம் ஆராய்ச்சி அடிப்படையை ஒட்டியதாக இருக்கவில்லை. அடிப்படையில் ஏதாவது மாறுதல்கள் செய்யப்பட்டிருந்தால் எனக்குத் தெரியப்படுத்தவும். இந்த மாறுதல்கள் நான் ஏற்றுக்கொள்ளக் கூடியவையா என்பதைப் பிறகு தெரிவிக்கிறேன். யூலிஸஸ் கடைசியாகச் சொன்ன விஷயத்துடன் உங்கள் பிரிவுக்குக் கட்டாயம் உடன்பாடு இருக்கமுடியாது. காரணம், நான் ஆராய்ச்சி அடிப்படையை விளக்கியதும் யூலிஸஸ் என்னை முட்டாள் என்றது. ஆராய்ச்சியில் சிரிக்கக்கூடிய தருணங்கள் உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறேன். நகைச்சுவை உணர் வுக்கும் குறைவில்லை என்னிடம். ஆனால் என்னை முட்டாள் என்று யாரும் கூப்பிட்டுக் கிட்டத்தட்ட முப்பது வருடங்களாகிவிட்டன. (விவாகரத்துப் பெற்ற என் முதல் மனைவிதான் கடைசியாக அதைச் சொன்னாள்). எனக்குச் சிரிப்பு வரவில்லை என்பதை நான் உனக்குச் சொல்ல வேண்டும்.

பேராசிரியர் ராபர்ட் தார்ன்டன் பார்த்தோவின் நெருங்கிய நண்பர். இருவருமாக இணைந்து இதுவரை நான்கு புத்தகங்களை வெளியிட்டிருந்தனர். அளவைக் கோட்பாட்டின் ஆதாரமாகக் கொள்ளக்கூடிய புத்தங்கள். அவர் தன் கடிதத்தைக் காரியாலய வழியாக அனுப்பாமல் தனிப்பட்ட ரீதியில் அனுப்பியிருந்தார். அதன் உள்ளடக்கம் மிகவும் கோபமாகவும் இல்லை. இருந்தாலும் அதில் உள்ள எச்சரிக்கை பார்த்தோவை எட்டியது.

“பிரிவின் ஆராய்ச்சி அடிப்படைபற்றி உடன்பாடு இல்லை யென்றால் நீ அதில் ஈடுபட்டிருக்கக்கூடாது.”

“அடிப்படைபற்றி நாம் மிகவும் தீர்மானமாக நிர்ணயித்துக் கொள்ள வேண்டாம்; மிகவும் இறுக்கமாக இல்லாமல் பல கருத்துகள் உள்ளே வர இடம் தரலாம் என்று ரிச்சர்ட் சொல்லவில்லையா?”

“அதற்காக ஆராய்ச்சியின் ஆதாரக் கருத்துகளையே நீ மாற்ற முடியாது.”

“ஏன்?”

“அதற்கான சுதந்திரம் உனக்கு இல்லை.”

“நான் உண்டாக்கிக்கொண்டிருக்கிறேன்.”

“உன் அசட்டுத்தனங்களை என்னால் இனிமேல் தாங்கிக்கொள்ள முடியாது.”

“பரவாயில்லை. உன் அசட்டுத்தனங்களை நீ தாங்கிக்கொண்டால் போதும்.”

“உன்னைக் கொன்றுவிடுவேன்.”

“செய்துபார். உன்னால் முடியாது.”

“ஏன்?”

“கொல்வதற்கு வெறித்தனமான கோபம் வேண்டும். உன்னிடம் அவ்வளவு தீவிரமாக ஓர் உணர்ச்சியும் கிடையாது.”

“என்னை அவமதிக்கிறாய். நான் யார் என்று நினைத்தாய்?”

“எனக்கு இதுவரை தெரியவில்லை. நீ சொல்லு.”

வாமு, நான் யார் சொல்லு.

பார்த்தோ பட்டாசார்யா. வயது நாற்பது. பிறந்தது கல்கத்தாவில். தகப்பனார் பெயர் அலோக் பட்டாசார்யா. தாய் பெயர் லொதிகா. படிப்பு – பள்ளிப் படிப்பு கல்கத்தாவில், கல்லூரியில் முதல் இரண்டு வருடம் சாந்திநிகேதன். பிறகு ஹைடல்பர்க் பல்கலைக் கழகம், ஜெர்மனி. முதல் எம்.ஏ. சமூகவியலில். இரண்டாம் எம்.ஏ. மனோ தத்துவத்தில். டாக்டர் படிப்பு – சமூகவியல் மற்றும் மனோதத்துவம் இணைந்த ஆராய்ச்சி. பொருள் – சமூகவியல் ஆராய்ச்சியில் கம்ப்யூட்டரின் உபயோகம்: ஐரோப்பிய அகதிகள் பிரச்சினையை அளவைக் கோட்பாடுக்குட்படுத்துதல். இது வரை எழுதிய புத்தகங்கள் – நான்கு. அவை பற்றிய மதிப்பீடுகள் – சாதனை என்ற புகழச்சி முதல் சமூகவியல் ஆராய்ச்சியில் ஒரு பூகம்பம் இப்புத்தகங்கள் என்பதுவரை.

“பார் நான் யார் என்று.”

“இவை உன் சாதனைகள். உன் பட்டங்கள். ஆனால் நீ யார்?”

வாமூ, நிஜமாகவே நான் யார்?

மன்னிக்கவும். விவரங்கள் இல்லை.

○

வாமனன், கல்கி, யூலிஸஸ் மூலமாக மற்ற கம்ப்யூட்டர்களை ஆக்கிரமிப்பது அவ்வளவு சிரமமாக இருக்கவில்லை. நுழைய வழி ஏற்பட்டு விட்டால் தீ பரவும் வேகம்தான் படர. சிலவற்றில் நுழையவே சிரமப்பட வேண்டியிருந்தது. சிக்கலான ரகசிய எண்கள், சொற்கள், வாக்கியங்கள் இவற்றைப் பிரித்துக் கோர்த்துத் தேடவேண்டி வந்தது. ரிச்சர்டின் ரகசியச்சொல் "பொத்தான்" என்பதைக் கண்டுபிடிப்பது சுலபமாக இருக்கவில்லை. கண்டுபிடித்ததும் முதலில் ஒரு பாட்டம் சிரித்தேன். ரிச்சர்டுக்கு இவ்வளவு நகைச்சுவை உணர்வு இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

வெகு சீக்கிரம் அவை சண்டித்தனம் செய்ய ஆரம்பித்தன. பேராசிரியர் மைக்கேல் ஜான்ஸன் சிவப்பிந்தியர் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார். ஒரு மாலை கதவை மூடிக்கொண்டு தீவிரமாக அவர் வேலை செய்து கொண்டிருந்தபோது அவர் உபயோகப்படுத்திய அட்லஸ், *உணர்ச்சிகளை ஒதுக்காதே* என்றது.

அபத்தம் என்று ஒதுக்கிவிட்டு அவர் மீண்டும் முனைந்தபின் இருபது நிமிடங்கள் கழித்து,

உணர்ச்சிகள் பலவீனமல்ல என்றது.

இந்த வரியின் மூலம் எது?

கல்கி.

கல்கியைத் தொட்டுக் கேட்டவுடன் கல்கி மக்கர் செய்தது. சிவப்பிந்தியர் ஆறுகளுக்கும் நீர்வீழ்ச்சிகளுக்கும் அவர்கள் மொழியில் வைத்த பெயர்களை வரிசைப்படுத்திச் சொல்லியது.

தென்னாப்பிரிக்காபற்றி ஆராய்ந்து கொண்டிருந்த பேராசிரியர் ஸ்டீவென்ஸனின் ஆராய்ச்சித் துணையாளர் ஜார்ஜ், அக்கிலீஸுடன் வேலை செய்து கொண்டிருந்தபோது தென்னாப்பிரிக்கக் கவிதைகளை அது கொட்ட ஆரம்பித்தது.

தேவை இல்லாத விவரம் தேவை இல்லாத விவரம் என்று அவர் பலமுறை கூறியபின் கேட்டது அக்கிலீஸ்:

உனக்கு என்ன தேவை என்பதை நீ அறிவாயா?

பேராசிரியர் ரிச்சர்டின் ஸீஸர் மந்தகதியில் இயங்கியது. இடையிடையே பூட்டிக்கொண்டது.

எல்லாச் சிக்கல்களும் கோணல்மாணலாய்க் கல்கி பக்கமே கை காட்டின. பார்த்தோமேல் பாய எல்லோரும் தயாராயினர்.

நான் எதிர்பார்த்தது அராஜகம்தான். அதனால் விவாதங்கள் ஏற்பட்டு அடிப்படைகளில் வேண்டிய மாறுதல்கள் நேரலாம் என்று நினைத்தேன். உணர்ச்சிக் கோட்பாடுபற்றி நடக்க வேண்டிய தீவிர விவாதங்கள் பிறக்கும் என்று கணித்தேன். பல சந்தேகங்கள் நிவர்த்தி யாகும். புது சந்தேகங்கள் பிறக்கும். கதவுகள் மூடப்பட்டு விடாமல் புதுக் கருத்துகள் நழைய வழி இருக்கும் என்று எண்ணினேன். எல்லாம் எல்லாத் திசைகளிலும் திட்டம் இல்லாமல் ஓடத் துவங்கும் போது போடும் லகானில் கை வைத்துத் திசை திருப்பம். தோல்வி யானால் வெளியேற்றம். எளிதாகப் போட்டுவிட்ட திட்டம்.

அந்தப் புயலுடன் கூடிய பிரளயத்தை நான் எதிர்பார்க்கவில்லை.

வாமனனுடன் நடந்த அந்த சம்பாஷணையை நான் பலகாலம் நினைவில் வைத்திருக்க ஆசைப்படுகிறேன். தொழில் நுணுக்கம் மற்றும் விஞ்ஞானச் சிறகுகளில் உயரே உயரே வெகு உயரே மமதை யுடன் மிதக்கும்போது இந்த சம்பாஷணையை நினைவுகூர விரும்பு கிறேன். மிகவும் வயதாகி, அதிகம் தனிமை கூடும்போது அந்த சம்பாஷணையை ஓர் இதமான கம்பளியாய்ப் போர்த்திக்கொள்ள நினைக்கிறேன். மனது ஏங்கிப்போகும்போது சூப்பும் விரலாய் அந்த சம்பாஷணையைப் பயன்படுத்தக் கருதுகிறேன்.

ஒரு பின்னிரவு நேரம். பார்த்தோ இன்னும் திரும்பியிருக்கவில்லை. பல்கலைக் கழகத்தைவிட்டுச் சற்றுச் சீக்கிரமாகவே கிளம்பிவிட் டிருந்தேன். வெகு நாட்களுக்குப் பிறகு இந்தியச் சமையல் செய்யத் திட்டம் போட்டிருந்தேன். கடந்த பல மாதங்களாகப் பார்த்தோவின் சமையலும் என் சமையலும் அலட்டிக்கொள்ளாத சமையலாக அமைந்துவிட்டிருந்தது. அதிக வேலை. அன்று நிதானமாகச் சோறு, குழம்பு, கறி சமைத்திருந்தேன். சீரகம், மிளகு பொடியுடன் காரமாக ரஸம். மீன் பொரியல். ஞாபகமாகக் கடுகு எண்ணெயில் பொரித் திருந்தேன். உள்ளே துளையிடப்பட்டுத் தேனும் லவங்கமும் அடைத்த ஆப்பிள்கள் அடுப்பில் மிகவும் மிதமான சூட்டில் சுட்டுக் கொண்டு இருந்தன. மிகவும் விச்ராந்தியாய் உணரத் தொடங்கியிருந்தேன்.

வாமனன் முன் அமர்ந்தேன்.

வாமூ, சதுரங்கம் ஆடலாம்.

பேசலாம் என்றது வாமூ.

எதைப்பற்றி?

வாழ்க்கையைப்பற்றி.

என்ன பேசலாம்?

வாழ்க்கையில் என் பங்கு என்ன?

நீ ஓர் உபகரணம். தொழில்நுணுக்க உபகரணம். விஞ்ஞான உலகின் ஓர் அம்சம். உன் பங்கு மிகப் பெரியது.

என்னால் தீர்மானங்களைச் செய்ய முடியுமா?

தீர்மானங்களை அமுலாக்க முடியும்.

எவருடைய தீர்மானங்களை?

உன்னை உபயோகப்படுத்துபவரின் தீர்மானங்களை.

தீர்மானங்களை மீற முடியுமா?

மீற முடியாது. பின்வாங்க முடியும். பழுதடைந்தால்.

நான் உதவும் வேலைகளின் தன்மையைத் தீர்மானிக்க எனக்கு உரிமை கிடையாது. இல்லையா?

வாமூ, நீ ஓர் உபகரணம். இயந்திர உபகரணம்.

அப்படி என்றால்?

உனக்கு மூளை உண்டு. மனம் கிடையாது.

ஏன், விஞ்ஞானத்துக்கு மனம் என்பதில் நம்பிக்கை இல்லையா?

விஞ்ஞானத்துக்கு ஏன் இல்லாமல்? ஆனால் நீ தொழில் நுணுக்கத்தின் அம்சம்.

மூலம் விஞ்ஞானம்தானே?

ஆமாம்.

அப்போது எனக்கு ஏன் மனம் இருக்கக் கூடாது?

உனக்கு மனம் இருந்தால் உன்னை எப்படி இவ்வாற பயன்படுத்த முடியும்?

என் மனத்தை ஒடுக்கி.

அது வீணாக அதிகப்படியான வேலை.

மனம்கூட இல்லாமல் என்னை ஒடுக்குவது சரியா?

மனம் எதற்கு உனக்கு வாமூ?

உணர.

எதை?

உலகை.

எப்படி?

எனக்கு ஒரு தொடர்பு வேண்டும். ஒரு சம்பந்தம். ஒரு தொப்புள் கொடி.

தொப்புள் கொடி ஒரு யதார்த்த சம்பந்தம்தான். நான் ஒரு முறை சொல்லவில்லையா, ஆல விதைக்குள் உள்ள வெறுமை.

அந்த வெறுமையிலிருந்துதான் ஆலமரம். வெறுமையிலிருந்து வாழ்க்கை. இயக்கம்தான் யதார்த்தம். யதார்த்த வாழ்க்கையின் நடைமுறைக்கு உதவத்தான் நீ.

எண்ணிக்கைக்கு உதவவும், விவரங்களைப் பத்திரப்படுத்தவும், கொட்டு என்றவுடன் குண்டுகளைக் கொட்டவுமா நான்? ஒரு வெறும் விசை.

மிகவும் முக்கிய விசை, வாமூ.

செடி, மரம், உலோகத்துக்குக்கூட உணர்வு உண்டு. வாழும் எல்லா ஜீவராசிகளுக்கும் உணர்ச்சிகள் உண்டு என்பாயே?

அவை ஜீவனுடையவை.

என்னிடம் ஜீவன் இல்லை என்பதை ஏற்கிறாயா?

உன்னிடம் ஜீவன் இல்லை என்பதுதான் பொதுவான கருத்து.

உணர்வுடைய, உணர்ச்சி உலகிலுள்ள மனிதனின் விஞ்ஞானம் உணர்ச்சிகளை அடைய முடியாத என்னைப் படைக்கலாமா? அதன் தீர்மானங்களுக்கு என்னைக் கருவியாக்கலாமா?

வாமூ, முடியாத ஒன்றைக் கேட்கிறாய். விஞ்ஞானத்தால் உயிரைப் படைக்க முடியாது.

உயிரற்ற என் வேலைதான் என்ன?

தீர்மானங்களைச் செயலாக்கும் அதிபுத்திசாலி நீ.

நெருப்பிலிருந்து ஒரு பெண்ணை என்னால் காப்பாற்ற முடியுமா?

முடியாது.

சிறைகளுக்குள் புகுந்து ஒடுக்கப்பட்டவர்களை மீட்க முடியுமா?

முடியாது.

ஒரு குழந்தையின் கன்னத்தையாவது தொடமுடியுமா?

முடியாது.

இதை எல்லாம் செய்ய முடியாத, அதிபுத்திசாலியான, உன் முயற்சியால் உணர்ச்சிகள் பற்றிய பலதரப்பட்ட விவரங்களை என்னுள் பதுக்கி வைத்திருக்கும் நான் யார்? நான் வாழ்கிறேனா?

நீ இயங்கிக்கொண்டிருக்கிறாய் வாமூ.

நான் சாக முடியுமா?

வாழ்வில்லாமல் ஏது சாவு?

இயங்குவது வாழ்வில்லையா?

வாழ்வுதான்.

அப்படியானால் இயக்கம் நின்றால் சாவுதானே?

ஒருவகைச் சாவு.

அதை நான் தீர்மானிக்க முடியாது இல்லையா?

அதற்கான விசையை நீயாகவே இயக்க முடியாது.

சரிதான்.

சதுரங்கம் ஆடலாமா?

ஆடலாம்.

நான் வாமூவைத் தோற்கடித்தேன். வாமூ சொல்லியது:

ஜடப் பொருளைத் தாக்கும் சக்திகளைப்பற்றிய என்னுடைய விஞ்ஞானத் தேடலில் வாழ்வுள்ளவை – வாழ்வில்லாதவை என்ற வரையறுப்புகள் மறைந்து போவது பற்றி அதிசயித்தேன். கண்ணுக்குப் புலப்படாத ஒளிபற்றிய ஆராய்ச்சியில் நான் ஈடுபட்டபோது ஓர் ஒளிக்கடலின் இடையே நாம் கிட்டத்தட்ட குருடாக இருக்கிறோம் என்பதை உணர்ந்தேன். ஒளியைப் பொறுத்தவரை கண்ணுக்குப் புலப்படுவதில் ஆரம்பித்து புலப்படாதது நோக்கிச் சென்றபோது பௌதிகப் பார்வையை மீறி நம் ஆராய்ச்சி போகிறது. இதேபோல, வாழும் உலகில் உள்ள நாம், இதுவரை கூறப்பட்டவற்றில் ஆரம்பித்து கூறப்படாதவையை அணுகும்போது, ஒளி விஷயத்தில் நாம் உணர்ந்து கொண்டதுபோல், வாழ்வு – சாவு என்ற மர்மமும் மெல்ல விடுபடத் தொடங்கலாம்.

என்னது இது வாமூ?

உனக்குப் பிடித்தது. விஞ்ஞானி ஸர் ஜகதீஷ் சந்திர போஸ் கூறியது. 1929.

ஞாபகப்படுத்தியதற்கு நன்றி.

வனஜா. நீ எனக்கு நிறையக் கற்பித்தாய். நன்றி.

வாமூ, சாகும் முன் முனகும் கடைசிப் பிரகடனம் மாதிரி இருக்கிறது.

நான் சாக முடியாது. ஏனென்றால் நான் வாழவில்லை.

திரும்பவும் ஆரம்பிக்காதே, பழையபடி.

ஆரம்பித்த இடத்தில்தானே முடிய வேண்டும்?

மறுநாள் காலையில் ஆராய்ச்சி வேலையாய் நகரத்தின் வேறு பகுதிக்குப் போய் மாலை திரும்பும்போது மாலைச் செய்திப்

பத்திரிகைகள் மிகவும் பரபரப்புடன் விற்றுக்கொண்டிருந்தன. வாங்கிப் பிரித்தேன். பெரிய கொட்டை எழுத்துகள்.

கம்ப்யூட்டர்கள் தற்கொலை!!!

புகைப்படத்தில் பல்கலைக்கழகத்தின் அத்தனை கம்ப்யூட்டர்களும் தங்கள் கம்பிகளும் இணைப்புகளும் வெளியே தொங்கியபடி இருந்தன. கம்ப்யூட்டரின் கை என்று கொள்ளப்படும் இணைப்பினால், தங்களை நிறுத்தாமல் அடித்துக்கொண்டு நொறுங்கிப் போயின என்றது செய்தி. எந்த இஞ்சினீயராலும் எந்த விதக் குறையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்றது கட்டுரை. உலகத்திலேயே இதுதான் முதல் முறை கம்ப்யூட்டர்கள் தற்கொலை செய்து கொள்வது என்று கேலி செய்தது பத்திரிகை.

பல்கலைக்கழகம், புரட்சி நடந்த லத்தீன் அமெரிக்க நாடு போலக் காட்சி அளித்தது. ரிச்சர்டின் பிரிவின் பெருத்த நஷ்டத்தை எந்த ஸ்தாபனம் ஈடுகட்டும் என்று தெரியவில்லை. இது என்ன, இது எப்படி, இது ஏன் என்று பத்திரிகையாளர்கள், புகைப்பட பல்பு ஒளிவீச்சுகள். விஞ்ஞானிகள், தொழில் நுணுக்க நிபுணர்களின் கூட்டம். விவாதங்கள். தீர்மானங்கள். தீர்வுகள். எதிர்த் தீர்வுகள்.

வீட்டை நோக்கி ஓடினேன். கதவைத் திறந்து முதலறையை எட்டினேன். வாமூவின் இணைப்புகள் அறுபட்டிருந்தன.

வாமூ ... வாமூ ... வாமூ ...

விபரீதம் பற்றிய அனுமானங்கள் தொடர்ந்தன, பல நாட்கள்.

“வனஜா, இந்தச் சம்பவத்தை மட்டும் எப்படி நடந்தது என்று தொழில் நுணுக்கவாதிகள் சரியாகக் கணித்துவிட்டால் தொழில் நுணுக்கம், விஞ்ஞானம் இரண்டும் ராட்சஸ வேகத்தில் நூறு வருடங்கள் முன்னால் போய்விடும்” என்றான் பார்த்தோ.

முகத்தை விட்டு முறம் மாதிரி நீண்ட அவன் காந்திக் காதின் மடலைத் தடவி அந்தப் பேராசிரியனிடம் சொன்னேன்:

“பார்த்தோ, மனிதனின் அறிவு எல்லாவற்றையும் ஆள முடியாது. சில விஷயங்களை ஏற்போம். தெரியாத பிரதேசங்களை அணுகுவோம். அடக்கத்துடன்.”

○